## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி
## O.S. No.115/2009

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 09.042026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரகுபதி (D.W.3) | வயது | : | 72/2026 |
| க/த பெயர் | : | திரு. கோவிந்தராஜ் | தொழில் | : | – |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>முதல் விசாரணை ;–</u>**

1. நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். எனது அப்பா கோவிந்தராஜ் ஒரு ஆவண எழுத்தர் என்றால் சரிதான், அவர் 2000 இல் இறந்துவிட்டார், தேதி மாதம் ஞாபகம் இல்லை. எனது அப்பா ஆவண எழுத்தராக எவ்வளவு காலம் இருந்தார் என்றால் 20–25 வருடங்களாக இருந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ–3 ஆவணத்தை செங்கம்மாள் அவரது மகன் சேட்டிற்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் ஆவண எழுத்தர் என்று எனது அப்பா கையெழுத்திட்டுள்ளாரா என்றால் ஆமாம், பிசா.ஆ.3 ஆவணத்தில் உள்ள ஆவண எழுத்தர் கோவிந்தராஜ் என்பது எனது அப்பாவின் கையெழுத்துதான்.

2. பி.சா.ஆ.3 ஆவணத்தில் அதில் உள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து என்பதை தவிர மற்ற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி சேட்டுவை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அவரும் நீதிமன்றத்திற்கு

வந்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் கோவிந்தராஜ் ஆவண எழுத்தர் என்பது குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் கோவிந்தராஜ் அரசு உரிமம் பெற்ற ஆவண எழுத்தரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எந்த வருடத்திலிருந்து ஆவண எழுத்தராக வேலை பார்த்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 1970 லிருந்து வேலை பார்த்து வந்தார். எனது தகப்பனார் எந்த முகவரியில் குடியிருந்தார் என்றால் மன்னார்குடி வாணக்கார தெருவில் குடியிருந்தார். எனது தந்தை ஆவணம் எழுதுவதற்கான அலுவலகம் வைத்திருந்தாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ஆவணம் எழுதுவார் என்றால் சரிதான்.

3. எனது அப்பா தமிழில் கையெழுத்திடுவாரா அல்லது ஆங்கிலத்தல் கையெழுத்திடுவாரா என்றால் ஆங்கிலத்தில் கையெழுத்திடுவார். ஆவண எழுத்தரின் முகவரி குறித்து எனது தகப்பனாரால் எழுதப்படும் ஆவணத்தில் கையால் எழுதுவாரா அல்லது அதற்கென சீல் வைத்திருந்தாரா என்றால் கையால் தான் எழுதுவார். எனது தந்தை எந்த தேதியில் இறந்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தேதி மாதம் ஞாபம் இல்லை 2000 ல் இறந்தார். எனது அப்பா எப்படி இறந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார். பி.சா.ஆ–3 ஆவணத்தை எழுதுவதற்கு முன்பு எவ்வளவு ஆண்டுகள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் மாரடைப்பால் இறந்துவிட்டார். பி.சா.ஆ–3 ஆவணத்தில் உள்ள எனது அப்பாவின் கையெழுத்து பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாமல் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.10 17:14:12 +0530

District Munsif
Mannargudi.